# அனகாபுத்தூர் நகராட்சி

**<u>சென்னை – 600 070.</u>**

<u>கூட்ட எண்.54/2019</u> <u>நாள். 30.01.2020</u>

## <u>தனி அலுவலர் அவர்களின் நவம்பர் 2019 மாதம் அவசரக் கூட்டப்பொருள்</u>

30.01.2020ம் நாள் வியாழன்கிழமை காலை 11.00 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் அவசரக் கூட்டப் பொருள் .

**<u>பொருள் எண். 1</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளின் எல்லைகளை தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அளித்துள்ள சுற்றறிக்கை எண்.D-11/2017, ந.க.எண்.3174/17/தேபொ1, நாள்.13.12.2017–ல் கண்டுள்ள கருத்துரு மற்றும் விதி முறைகளின்படியும் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையர் சென்னை –106 அவர்களின் 27.01.2020ம் தேதிய கடிதம் ந.க.எண்.554/2020/EE1 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் எல்லைகள் மறுவரையறை செய்த வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது, மேற்கண்ட 18 வார்டுகளின் எல்லை மறுவரையறைக்கு, 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியுள்ள 48050 எண்ணிக்கையும், 31.03.2019 வரையுள்ள வரி விதிப்பு செய்யப்பட்ட குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 10705 மற்றும் வரி விதிப்பு அல்லாத குடியிருப்புகளின் எண்ணிக்கை 3707 கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வார்டு எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டுள்ளன.

வரைவு வார்டு மறுவரையறை பிரேரணை உத்தேச புதிய வார்டு 1 முதல் 18 வரையுள்ள தெரு பட்டியல், எல்லைகள் மற்றும் வரைபடங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் சென்னை –600 106 அவர்களின் 27.01.2020ம் தேதிய கடிதம் ந.க.எண்.554/2020/EE1 ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழி முறைகளின்படி தயார் செய்யப்பட்டுள்ள 18 வார்டுகளின் மறுவரையறை வரைவு பிரேரணையினை மாவட்ட மறுவரையறை அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித்தலைவர் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் ஒப்புதல் பெற்று மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி